குயிலே பாடு குயிலே பாடு
காலை விடிந்ததென்று குயிலே பாடு
எங்கள் கவலை முடிந்ததென்று குயிலே பாடு
சோலை மலர்ந்தது சுகந்தம் எழுந்தது
துணிவுடன் வேங்கைகள் அணி ஒன்று பிறந்தது
பாடு பாடு

குயிலே பாடு குயிலே பாடு

குண்டு பொழிந்தது வானம்
கடல் குருதி போலவே ஆடும்
தங்கத் தமிழர்கள் சாவின் மடியினில்
இங்கு மடிந்தனர் நேற்று
இப்போ எங்கள் திசையில் காற்று
புலி எழுந்து வந்ததை காட்டு
இனி எதிரி வாசலில் பூட்டு

குயிலே பாடு குயிலே பாடு

எங்கள் தலைவனின் மூச்சு
தமிழ் ஈழம் என ஆபத்தாய் ஆச்சு
பொங்கி எழுந்தவன் போரில் குதித்த பின்
புலிகள் ஆகினர் தமிழர்
இதில் பொசுங்கி போயினர் பகைவர்
இனி எங்கும் எழும்புவர் புலிகள்
விழும் எதிரி படைகளின் தலைகள்

குயிலே பாடு குயிலே பாடு

கழுத்தில் ஆடுது நஞ்சு போர் களத்தில் ஆடுது நெஞ்சு
விழுத்த முடியுமா வேங்கை வீரரை
விழுந்தும் எழும்புவர் புலிகள் பகை
விரட்டி எடுப்பரே புலிகள் இனி
பழுத்து விழுந்திடும் கனிகள்
புதுப் பரணி எழுதுவர் கவிகள்

குயிலே பாடு குயிலே பாடு